<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>இ.ம.மனு. 09/2023</u>

<u>அசல் வழக்கு எண். 126/2022</u>

PW1 – திரு. தமிழ்ச்செல்வன் நாள். 14.02.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>முதல் விசாரணை</u>

1. நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் சொல்லியுள்ள சர்வே எண்.205/1 தொடர்பான சர்வே செய்ததற்கான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். மேற்படி சொத்து தொடர்பாக மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் பிறப்பித்த உத்தரவை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி உத்தரவு எண். W.P.(MD) No.555/2023 நாள் 27.01.2023 ஆகும். மேற்படி உத்தரவில் நான் 2 ம் மனுதாரராக உள்ளேன் என்றால் சரிதான். **(மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்றம் W.P.(MD) No.555/2023 ல் பிறப்பித்த 27.01.2023 தேதி கொண்ட உத்தரவை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. மேற்படி நீ.ம.சா.ஆ.1 உத்தரவின் அடிப்படையில் நான் என்ன நடவடிக்கை

எடுத்தேன் என்றால் மேற்படி உத்தரவின் அடிப்படையில் வட்டாட்சியர் சர்வே எண்.205/1 சொத்தை அளக்க கோரி உத்தரவிட்டார் அதனடிப்படையில் நான் மேற்படி சொத்தை 26.04.2023 அன்று அளந்து வட்டாட்சியரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன். (**வட்டாட்சியர் சர்வே எண்.205/1 இடத்தை அளவீடு செய்வதற்காக போடப்பட்ட உத்தரவு நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது, நான் வட்டாட்சியரிடம் சமர்ப்பித்த அளவீடு தகவல் குறிப்பு நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

<u>குறுக்கு விசாரணை</u>

1. W.P.(MD) No.555/2023 மனு யார் தாக்கல் செய்தது என்றால் கல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் கஸ்தூரி என்பவர் தாக்கல் செய்தார். மேற்படி மனுவானது கல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் என்ற முறையில் தாக்கல் செய்யவில்லை என்றும், கஸ்தூரி என்ற தனி நபர் தாக்கல் செய்தது என்றால் சரிதான். மேற்படி நீ.ம.சா.ஆ.1 உத்தரவில் சர்வே எண்.205/1 என்ற சொத்தை அளவீடு செய்யுமாறு மட்டும் தான் சொல்லப்பட்டது என்றால் சரிதான்.

2. கோனேரிக் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவர் மேற்படி கஸ்தூரி மேற்சொன்ன பேராணை மனு தாக்கல் செய்வதற்கு முன்பே சர்வே எண்.205/1 சொத்து தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியாது. நீ.ம.சா.2 ஆவணத்தில் குமார் என்பவர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் தான் என்னை சர்வே எண்.205/1 சொத்தை அளப்பதற்கு உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான், W.P.(MD) No.555/2023 மற்றும் W.P.(MD) No.1570/2023 என்ற எண்களும் அதில் சொல்லப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.2 உத்தரவின் அடிப்படையில் நான் வட்டாட்சியரிடம் தாக்கல் செய்த தகவல் குறிப்பில் மேற்படி சர்வே எண்.205/1 சொத்தில் என்னென்ன

கட்டுமானங்கள் உள்ளது என்றும் அதன் அளவு எவ்வளவு என்றும் தகவல் சேகரித்தேனா என்றால் நீ.ம.சா.ஆ.1 உத்தரவின் படி சர்வே எண்.205/1 சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் தொடர்பாக மட்டும் தான் அளவீடு செய்ய சொன்னதால் அது தொடர்பாக மட்டும் தகவல் சேகரித்து வட்டாட்சியரிடம் சமர்ப்பித்தேன். நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் எனது கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான்.

## மறு விசாரணை

1. கிராமத்தில் பொதுவாக பொது சொத்து இருந்தால் அதை கிராம ஊராட்சி மன்றத் தலைவர் தான் அளவீடு செய்ய முடியும் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 உத்தரவில் W.P (MD) No.3605/2023, W.P (MD) No.555/2023 மற்றும் W.P (MD) No.1570/2023 போன்ற மனுக்களில் ஏற்பட்ட உத்தரவுகள் அனைத்தும் காண்பித்து ஒன்றாக விசாரணை நடத்தக் கோரிதான் வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான்.